பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 05 2025 **FRIDAY** 6 45 **AM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம், விவசாயத்தில் நவீனமயமாக்கலை ஊக்குவிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. அடுத்த இரண்டு ஆண்டுகளில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பாண்டில் 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு கே.ஆர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் நீலகிரி, கோவை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<**

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம், விவசாயத்தில் நவீனமயமாக்கலை ஊக்குவிக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் நேற்று தொடங்கப்பட்ட இந்த இயக்கம் தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், உள்நாட்டு உணவுத் தேவையை பூர்த்தி செய்வது மட்டுமின்றி சர்வதேச அளவிலான தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் துறையில் நாடு பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வேளாண் விஞ்ஞானிகள் இதில் முக்கியப் பங்கு வகித்து வருவதாகவும் அவர் கூறினார்.

புதிய உத்வேகத்துடன் இந்த முயற்சிகளை மேலும் விரைவுபடுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தில் பங்கேற்கும் அதிகாரிகள், நவீன உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

**>>>>><<<<**

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் திருமதி. விமலராணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். இந்த பிரச்சார இயக்கம் தங்களுக்கு பயனுள்ள வகையில் அமைந்திருப்பதாக இதில் பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<

அடுத்த இரண்டு ஆண்டுகளில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்திய தொழில் கூட்டமைப்பின் வருடாந்திர உச்சிமாநாட்டில் பேசிய அவர், நாட்டின் பொருளாதாரம் விரைவான வளர்ச்சி பெற்று வருவதாக கூறினார்.

சர்வதேச அளவில் நிலவும் நெருக்கடிக்கு மத்தியிலும், நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள நாடுகளின் மூலம், இந்தியா 100 பில்லியன் டாலர் முதலீடுகளை ஈர்க்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் நடப்பாண்டில் 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்படும் என்று மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஆர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.

கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

>>>>><<<<

உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் அறிஞர்கள் அவையம் என்ற நிகழ்வு மாதந்தோறும் நடத்தப்படும் என்று தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வை நேற்று தொடங்கி வைத்து பேசிய அவர், இதன் மூலம் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப துறைசார்ந்த வல்லுநர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும் என்று கூறினார்.

>>>>><<<<

தமிழகத்தில் நீலகிரி, கோவை, திருப்பூர், கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட 12 மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழைக்கும் வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய குடமுழுக்கு விழாவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, தூத்துக்குடியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

>>>>><<<<

தமிழக அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு 6 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று மாநில போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

சென்னையில் 15வது ஊதிய ஒப்பந்தம் தொடர்பான 3வது கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்து.

>>>>><<<<

இருவரிச் செய்திகள்

உலக நாடுகளுடனான அமெரிக்காவின் புதிய வர்த்தக வரி விதிப்பு நடவடிக்கைகளுக்கு அந்நாட்டு வர்த்தக நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

>>>>><<<<

தென்கொரிய கடற்படைக்குச் சொந்தமான ரோந்து விமானம், விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<

ஆறு நாடுகளைச் சேர்ந்த தூதர்கள், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவிடம் நியமன ஆவணங்களை வழங்கினர்.

>>>>><<<<

ஏவிஎன்எல், ஐஓஎல், என்ஐஎல் ஆகிய 3 பொதுத்துறை நிறுவனங்களுக்கு மினி ரத்னா அந்தஸ்து வழங்க பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

>>>>><<<<

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தின் கீழ், ஜம்முவில் இன்று நடைபெறும் விவசாயிகள் மாநாட்டில் மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் பங்கேற்கிறார்.

>>>>><<<<

பல்வேறு துறை செயலாளர்களுடன் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்து மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தலைமையில் புதுதில்லியில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் பகுதியில் முடிவுற்ற திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் பருவமழையால் ஏற்படும் தொற்று பாதிப்புகளை தடுப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம், ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில், டாஸ் வென்ற பெங்களூரு அணி பந்துவீச தீர்மானித்ததை அடுத்து, முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி 14 புள்ளி ஒரு ஓவரில் 101 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

102 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி, 10 ஓவரிலேயே இரண்டு விக்கெட் இழப்புக்கு 106 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள எலிமினேட்டர் சுற்று ஆட்டத்தில் குஜராத் அணி மும்பை அணியை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<**

சிலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் **Aryan Shah** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிஆட்டத்தில் அவர் 6-3, 3-0 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவில் **Thiago Cigarran-** ஐ வென்றார்.

**>>>>>END<<<<**